Crl.Misc.39

**Chapter XXIII code of Criminal procedure**
**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**
**SHOLINGANALLUR**
**DEPOSITION OF WITNESS**

**Calender** :
**Miscellaneous** : **CC.No.324/2025**
**Preliminary Register** :
**Police Station** : **Neelankarai PS**

**Deposition of witness for** : **LW3/PW1**
:

**Name** : **சரஸ்வதி**
:

:
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.04.2026.**
**(முதல் எதிரி ஆஜர் இல்லை 2 வது ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>

1. நான் எண்ணூரில் வசித்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக உள்ளேன். எனது தாயார் வீடு கொட்டிவாக்கத்தில் உள்ளது. எனது தாயார் வீட்டிற்கு வரும் பொழுது எதிரி செல்வி மற்றும் அவினாஷ் பழக்கமாகினர். எதிரிகள் மாதம் பண்ட் பிடித்து வந்தார்கள். அதற்கு எனது சார்பில் நான் 60 நபர்களை சேர்த்துள்ளேன். ஒருவருக்கு மாதம் ஆயிரம் விதம் 60 நபர்களுக்கு மாதம் 60 ஆயிரம் என்று 12 மாதங்கள் எதிரிகளிடம் கொடுத்தேன். அவர்கள் ஃபண்ட் பிடித்துவிட்டு அதற்குண்டான பணத்தையோ பொருளையோ கொடுக்காமல் ஏமாற்றி விட்டனர். இதற்கு இடையில்

2021 ஆம் ஆண்டு தேதி மற்றும் மாதம் ஞாபகம் இல்லை, அவர்களுக்கு பணம் நெருக்கடி உள்ளதால் என்னிடம் நான்கு லட்சம் கடனாக கேட்டார்கள். நான் கொடுத்தேன்.

2. அதற்கு பத்திரம் எழுதிதருமாறு கேட்டதற்கு என் மேல் நம்பிக்கை இல்லையா என்று கேட்டு அதற்கு ஏதும் எழுதி தரவில்லை. பின்பு வருடம் இறுதியில் 2021 ஆம் ஆண்டு பணத்தை கேட்டேன். அவர்கள் பணத்தை தராமல் நான் எப்பொழுது உன்னிடம் பணம் வாங்கினேன் என்று என்னை ஏமாற்றினார்கள். அதனால் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகார் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. பண்டு பணம் கொடுக்காததால் நானும் திவ்யாவும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். இந்த புகாரை திவ்யா கொடுத்தார். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

மற்ற சாட்சிகளை விசாரிக்க உள்ளதால் இந்த சாட்சிகளின் குறுக்கு சாரணையை மற்ற சாட்சிகளின் குறுக்கு விசாரணை செய்யும் பொழுது விசாரிக்கும்படி எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது

**Sd/–M.N.ராஜநந்திவர்மசிவா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**குற்றவியல் நடுவர்,**
**சோழிங்கநல்லூர்.**

**Chapter XXIII code of Criminal procedure**
**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**
**SHOLINGANALLUR**
**DEPOSITION OF WITNESS**

**Calender :**
**Miscellaneous : CC.No.324/2025**
**Preliminary Register :**
**Police Station : Neelankarai PS**

**Deposition of witness for : LW4/PW2**
**:**

**Name : ப்ரீத்தி**
**:**

**:**
**Village :**
**Taluk :**
**Caste :**
**Calling :**
**Religion :**
**Age :**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.04.2026.**
**(முதல் எதிரி ஆஜர் இல்லை 2 வது எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>

1. நான் கானத்தூரில் வசித்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக உள்ளேன். எனது தாயார் வீடு கொட்டிவாக்கத்தில் உள்ளது. அப்பொழுது ஆஜர் எதிரிகள் பழக்கமானார்கள். 2018 ஆம் ஆண்டு ஆஜர் எதிரிகளுக்கு ரூபாய் ஒரு லட்சத்தி ஐம்பதாயிரம் கடனாக கொடுத்தேன். பின்பு 2020 ஆம் ஆண்டு 5 லட்சம் சீட்டுக்கு மாதம் 10,000 விதம் 50 மாதத்திற்கு 19 மாதம் 10,000 விதம் ஒரு லட்சத்து 90 ஆயிரம் கட்டினேன். நான் சீட்டு கட்டிய பணம் மற்றும் கடனாக கொடுத்த பணத்தை

திரும்ப கேட்ட பொழுது கொடுக்கவில்லை. அதனால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அப்பொழுது ஊர் பெரியவர்கள் வைத்து பேசினார்கள்.

2. அப்போது காவல் நிலையத்தில் நான் சீட்டு பணம் ஒரு லட்சத்து 90 ஆயிரம் மட்டும் கொடுப்பேன் என்று அதற்கு என்னிடம் பிரியா பெயரில் காசோலை கொடுத்தனர். பிரியா என்பது எனது வீட்டில் அழைக்கும் பெயராகும். அந்த பெயரில் ரூபாய் ஒரு லட்சத்து 90 ஆயிரம் காசோலை ஒன்று எதிரி செல்வி கொடுத்தனர். என் கையில் உள்ள காசோலை அது தான் நான் கடனாக கொடுத்த ஒரு லட்சத்து 50 ஆயிரம் தரமாட்டேன் என்று ஏமாற்றி விட்டார்கள். எனது அக்கா சரஸ்வதியை நான் தான் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தேன். எனது அக்காவிற்கும் எதிரிகளுக்கும் பிரச்சனையாகி விட்டது. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

(மதிய உணவு இடைவேளைக்கு பிறகு குறுக்கு விசாரணை தொடரும்)

மற்ற சாட்சிகளை விசாரிக்க உள்ளதால் இந்த சாட்சிகளின் குறுக்கு சாரணையை மற்ற சாட்சிகளின் குறுக்கு விசாரணை செய்யும் பொழுது விசாரிக்கும்படி எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

**Sd/–M.N.ராஜநந்திவர்மசிவா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**குற்றவியல் நடுவர்,**
**சோழிங்கநல்லூர்.**